# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 186/மா/2025**

**நாள்: 16.09.2025**

| | | |
|---|---|---|
| திரு. N. ராபர்ட்<br>சென்னை | --- | முறையீட்டு மனுதாரர் |
| மண்டல அலுவலர், மண்டலம் 11<br>பெருநகர சென்னை மாநகராட்சி | --- | எதிர் மனுதாரர் |

சென்னை–600087, வளசரவாக்கம், ஆற்காடு ரோடு, கதவு எண் 147 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. N. ராபர்ட் என்பவரின் 25.04.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.04.2025 அன்று பெறப்பட்டு 186/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை–600087, வளசரவாக்கம், ஆற்காடு ரோடு, கதவு எண் 147 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. N. ராபர்ட் என்பவர் 25.04.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"நான் மூன்றாம் கண் என்ற மாத இதழ் நடத்தி வருகிறேன். மதுரவாயல் 147–வது வார்டில் என்னுடைய வீடு அமைந்துள்ளது. இந்த வார்டிற்கு மாமன்ற உறுப்பினராக ரமணி மாதவன் என்பவர் இருக்கிறார். அவரது கணவர் பெயர் மாதவன் ஆகும். இவர்கள் 147–வது வார்டிற்கு சம்பந்தப்பட்ட டெண்டர் வேலைகளை இவர்கள் செய்தும் செய்யாமலும் ஒப்பந்தாரர்கள் மூலம், கொள்ளை அடிக்கிறார்கள். இதற்கு உறுதுணையாக உதவி செயற்பொறியாளர் மண்டலம் XI–ல் பணிபுரியும் சாந்தி அவர்கள் இருந்து வருகிறார்.

147–வது வார்டில் சித்தி விநாயகர் (பாலாஜி) ஸ்ரீராம் புரோமோட்டர்ஸ் (ரமேஷ்) ஆகிய இருவரும் லிமிடெட் டெண்டர் வேலைகளை எடுப்பது மட்டுமே செய்கிறார்கள். ஆனால் அந்த வேலைகளை 147–வது மாமன்ற உறுப்பினரின் குடும்பத்தார் மேற்கண்ட நிறுவனத்திற்கு கமிஷன் கொடுத்துவிட்டு இவர்களே வேலை செய்வது போல் பாசாங்கு காட்டி மேற்கண்ட நிறுவனத்தின் M-Book–ல் உதவி செயற்பொறியாளரிடம் கையொப்பம் பெற்று கூட்டு கொள்ளை அடித்து வருகிறார்கள். இது எனக்கு தெரியவர 147–வது வார்டிற்கு சம்பந்தப்பட்ட இளநிலை பொறியாளர் முருகாநந்தம் அவர்களிடம் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு பேசிய போது, மேற்கண்ட 147–வது வார்டு கவுன்சிலர் தான் வேலை செய்கிறார் என்று தெரிவித்தார். அந்த தொலைபேசி குரல் பதிவிற்கான பென்டிரைவை இதனுடன் இணைத்துள்ளேன். மேலும் நான் இது சம்பந்தமாக மாண்புமிகு

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடமும், நகராட்சி நிர்வாக ஆணையர் டாக்டர் கார்த்திகேயன் IAS அவர்களிடமும், சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. குமரகுருபரன் IAS அவர்களிடமும் புகார்கள் கொடுத்து, விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள். 07.04.2025 அன்று மண்டல அலுவலர் உமாபதி அவர்கள் விசாரணை மேற்கொண்டார்கள். அவரிடம் நடந்து கொண்டிருக்கும் விவரங்களையும் JE அவர்கள் என்னிடம் பேசிய குரல் பதிவையும் அவரிடம் கேட்கும்படி செய்தேன். 24.04.2025 அன்று வட்டார துணை ஆணையர் எம்.பி. அமீத் IAS அவர்களது அலுவலகத்தில் துணை ஆட்சியர் (நிர்வாகம்) அவர்கள் என்னிடம் விசாரணை மேற்கொண்டனர். அவர்களுக்கும் நடந்து கொண்டிருக்கும் அனைத்தையும் தெளிவாக எடுத்துரைத்து JE அவர்கள் என்னிடம் பேசிய குரல் பதிவையும், அவர் கேட்கும்படி செய்து புகாரும் எழுதி கொடுத்துவிட்டு வந்துள்ளேன். நான் அனைவருக்கு அனுப்பியுள்ள தபால்கள் அனைத்தையும் இதனுடன் இணைத்துள்ளேன். 24.04.2025 அன்று வட்டார துணை ஆணையர் அழைத்த அழைப்பாணை நகலும் இதனுடன் இணைத்துள்ளேன். ஆகவே மேற்கண்ட மாமன்ற உறுப்பினர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோர் மீது விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 04.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 11–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 11ன் உதவி ஆணையர் (முதுநிலை) (ம) (பொ) அவர்களின் 14.07.2025 நாளிட்ட அறிக்கைஎண்.ம.அ.11 ந.க.எண்.அ2/2953/2025–ல் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள உதவி செயற்பொறியாளர், பகுதி–32 திருமதி.சாந்தி அவர்களிடம் விசாரணை மேற்கொண்டதற்கு அளித்த பதில் "நான் மண்டலம் 11 பகுதி 32ல் 2.09.2023 முதல் உதவிசெயற்பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். எனது பகுதிக்குட்பட்ட வார்டு எண்.143, 144, 146 மற்றும் 147 ஆகும். வார்டு 147ல் மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படும் பணி ஆணை அடிப்படையில் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரரைக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அப்பணிகளை கோட்டப் பொறியாளர் மூலம் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு அளவீடு புத்தகத்தில் பதிவு செய்யப்படுவதை உதவி செயற்பொறியாளர் மூலம் சரி பார்க்கப்படுகிறது. மேலும் பணிகளின் தரம் மற்றும் அளவீடு குறித்து களஆய்வின் போது உறுதி செய்யப்படுகிறது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும், சித்தி விநாயகர் எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்தின் உரிமையாளர் திரு.பாலாஜி என்ற ஒப்பந்ததாரரால் வார்டு 147ல் சில பணிகள் மேற்கொள்ளப்பட்டதை வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், உதவி பொறியாளர் 147 திரு.முருகானந்தம் அவர்கள் விசாரணை மேற்கொண்டபோது அளித்த பதில் : "நான் கோட்டம் 147ல் இளநிலைப் பொறியாளராக கடந்த 2022ம் ஆண்டு முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறேன். மண்டல அலுவலர் 11 அவர்கள் மூலம் ஒப்பந்ததாரருக்கு ஒப்பம் கோரப்பட்டு தேர்வு செய்து பணியாணை வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. அதனடிப்படையில் கோட்டம் 147ல் இளநிலை பொறியாளராகிய நான் 100 சதவீதம் ஆய்வு செய்து தரம் பார்த்து பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது. மேலும், 147வது மாமன்ற உறுப்பினர் அவர்களும் பணி நடைபெறும் இடத்தில் நேரில் சென்று ஆய்வு மேற்கொள்வார்கள். இதன் பிறகு பணிகள் முழுவதும் முடிந்தவுடன் சரியான Measurement எடுத்து M.Bookல் சரி பார்த்து உதவி செயற் பொறியாளர் / பகுதி–32 மற்றும் செயற்பொறியாளர் / மண்டலம் 11 அவர்கள் மூலம் ஆய்வு மேற்கொண்டு உரிய கையொப்பம் பெற்று மேல் நடவடிக்கைக்கு

அனுப்பப்படும் என்பதை தங்களின் மேலான பார்வைக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 22.07.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 15.07.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 22.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

''நான் மூன்றாம் கண் என்ற மாத இதழ் நடத்தி வருகிறேன். மதுரவாயல் 147–வது வார்டில் என்னுடைய வீடு அமைந்துள்ளது. இந்த வார்டிற்கு மாமன்ற உறுப்பினராக ரமணி மாதவன் என்பவர் இருக்கிறார். அவரது கணவர் பெயர் மாதவன் ஆகும்.

147–வது வார்டில் சித்தி விநாயகர் (பாலாஜி) ஸ்ரீராம் புரோமோட்டர்ஸ் (ரமேஷ்) ஆகிய இருவரும் லிமிடெட் டெண்டர் வேலைகளை எடுப்பது மட்டுமே செய்கிறார்கள். ஆனால் அந்த வேலைகளை 147–வது மாமன்ற உறுப்பினரின் குடும்பத்தார் மேற்கண்ட நிறுவனத்திற்கு கமிஷன் கொடுத்துவிட்டு இவர்களே வேலை செய்வது போல் பாசாங்கு காட்டி மேற்கண்ட நிறுவனத்தின் M-Book–ல் உதவி செயற்பொறியாளரிடம் கையொப்பம் பெற்று கூட்டு கொள்ளை அடித்து வருகிறார்கள். இது எனக்கு தெரியவர 147–வது வார்டிற்கு சம்பந்தப்பட்ட இளநிலை பொறியாளர் முருகாநந்தம் அவர்களிடம் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு பேசிய போது, மேற்கண்ட 147–வது வார்டு கவுன்சிலர் தான் வேலை செய்கிறார் என்று தெரிவித்தார். மேலும் நான் இது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடமும், நகராட்சி நிர்வாக ஆணையர் டாக்டர் கார்த்திகேயன் IAS அவர்களிடமும், சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. குமரகுருபரன் IAS அவர்களிடமும் புகார்கள் கொடுத்து, விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள். 07.04.2025 அன்று மண்டல அலுவலர் உமாபதி அவர்கள் விசாரணை மேற்கொண்டார்கள். அவரிடம் நடந்து கொண்டிருக்கும் விவரங்களையும் JE அவர்கள் என்னிடம் பேசிய குரல் பதிவையும் அவரிடம் கேட்கும்படி செய்தேன். 24.04.2025 அன்று வட்டார துணை ஆணையர் எம்.பி. அமீத் IAS அவர்களது அலுவலகத்தில் துணை ஆட்சியர் (நிர்வாகம்) அவர்கள் என்னிடம் விசாரணை மேற்கொண்டனர். அவர்களுக்கும் நடந்து கொண்டிருக்கும் அனைத்தையும் தெளிவாக எடுத்துரைத்து JE அவர்கள் என்னிடம் பேசிய குரல் பதிவையும், அவர் கேட்கும்படி செய்து புகாரும் எழுதி கொடுத்துள்ளேன்.

இம்மண்டலத்தில் ஸ்ரீசித்தி விநாயகர் நிறுவனம் மற்றும் ஸ்ரீராம் புரோமோட்டர்ஸ் ஆகிய ஒப்பந்ததாரர்களின் பணிகளை மேற்கண்ட மாமன்ற உறுப்பினரே செய்து வருகிறார். இவர்கள் மேற்கொள்ளும் பணி தரமானதாக இல்லை. குறிப்பாக ஸ்ரீதேவி நகர் பிரதான சாலை, கிருஷ்ணா நகர் பிரதான சாலை, அஷ்டலட்சுமி நகர் பிரதான சாலையில் போடப்பட்டுள்ள தார் சாலைகள் தரமற்று உள்ளன.

ஆகவே மேற்கண்ட மாமன்ற உறுப்பினர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோர் மீது விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கும்படி இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

6. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 11–ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 22.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

“தற்போதைய உதவி செயற்பொறியாளர் 02.07.2025 முதல் பகுதி 32 மண்டலம் 11ல் பணியில் சேர்ந்து நான் அளிக்கும் பதில்:–

புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள உதவி செயற்பொறியாளர், பகுதி–32 திருமதி.சாந்தி அவர்கள் 02.07.2025 அன்று மண்டலம் 11 பகுதி 32ல் இருந்து சென்னை பெருநகர மாநகராட்சி மழைநீர் வடிகால் துறையில் உதவிசெயற்பொறியாளராக பணி மாறுதல் செய்யப்பட்டுள்ளார். அவர், தமது பகுதிக்குட்பட்ட வார்டு எண்.143, 144, 146 மற்றும் 147 ஆகும். வார்டு 147ல் மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படும் பணி ஆணை அடிப்படையில் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரரைக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அப்பணிகளை கோட்டப்பொறியாளர் மூலம் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு அளவீடு புத்தகத்தில் பதிவு செய்யப்படுவதை உதவி செயற்பொறியாளர் மூலம் சரி பார்க்கப்படுகிறது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும், சித்தி விநாயகர் எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்தின் உரிமையாளர் திரு.பாலாஜி என்ற ஒப்பந்ததாரரால் வார்டு 147ல் சில பணிகள் மேற்கொள்ளப்பட்டதை வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேற்குறிப்பிட்ட பணிகள் திருமதி.சாந்தி அவர்களின் பதவி காலத்தில் நடைபெற்றது என்பதால் அடுத்த விசாரணைக்கு திருமதி.சாந்தி அவர்கள் விளக்கம் அளித்தால் சரியாக இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும், உதவி பொறியாளர் 147 திரு.முருகானந்தம் அவர்கள் விசாரணை மேற்கொண்டபோது அளித்த பதில் : நான் கோட்டம் 147ல் இளநிலைப் பொறியாளராக கடந்த 2022ம் ஆண்டு முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறேன். மண்டல அலுவலர் 11 அவர்கள் மூலம் ஒப்பந்ததாரருக்கு ஒப்பம் கோரப்பட்டு தேர்வு செய்து பணியாணை வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. அதனடிப்படையில் கோட்டம் 147ல் இளநிலை பொறியாளராகிய நான் 100 சதவீதம் ஆய்வு செய்து தரம் பார்த்து பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது. மேலும், 147வது மாமன்ற உறுப்பினர் அவர்களும் பணி நடைபெறும் இடத்தில் நேரில் சென்று ஆய்வு மேற்கொள்வார்கள். இதன்பிறகு பணிகள் முழுவதும் முடிந்தவுடன் சரியான Measurement எடுத்து M.Bookல் சரி பார்த்து உதவி செயற் பொறியாளர் / பகுதி–32 மற்றும் செயற்பொறியாளர் / மண்டலம் 11 அவர்கள் மூலம் ஆய்வு மேற்கொண்டு உரிய கையொப்பம் பெற்று மேல் நடவடிக்கைக்கு அனுப்பப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கிறோம்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஸ்ரீதேவி நகர் பிரதான சாலை, கிருஷ்ணா நகர் பிரதான சாலை, ஆகியவற்றில் போடப்பட்டுள்ள தார் சாலைகள் குறித்து விளக்கம் அளிக்க வேறொரு நாள் மற்றும் நேரம் வழங்குமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை கேட்டுக் கொள்கிறோம். மேற்குறிப்பிட்ட சாலைகளில் பணிகள் ஒரிரு இடங்களில் தரக்கட்டுப்பாடு சம்மந்தமாக ஏற்கனவே, அப்போதைய உதவி செயற்பொறியாளர் திருமதி.சாந்தி மற்றும் உதவிப் பொறியாளர் K.முருகானந்தம் ஆய்வு செய்த போது தர குறைவு கண்டறியப்பட்டதால், அப்பணிக்கான ஒப்பந்தத் தொகை நிறுத்தி வைக்கப்பட்டது என தெரிவித்துக்கொள்கிறோம்.”

8. மனுதாரர் முறையீட்டு மனு தொடர்பாக, மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான உதவி செயற்பொறியாளர் திருமதி சாந்தி ஆகியோர் மேல்விளக்கம் அளிக்கும் வகையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 29.07.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 24.07.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

9. மனுதாரர் 29.07.2025 அன்று நடைபெற்ற தொடர் விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

“இம்முறை மன்ற நடுவத்தில் 22.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி அளித்த வாக்குமூலத்திற்கு கூடுதலாக பின்வரும் விவரங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஏற்கனவே புகாரில் தெரிவித்தவாறு சென்ற வருடம் இப்பகுதியில் மழைநீர் வடிகால் பணியினை மாமன்ற உறுப்பினரே செய்து முடித்தார். இம்மாமன்ற உறுப்பினர் செய்யும் எல்லா பணிகளும் தரமற்றதாகவே உள்ளது. இதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 11ன் அலுவலர்கள் ஒத்துழைப்புடன் முறைகேடு நடைபெறுகிறது.

நான் ஏற்கனவே அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு உரிய நடவடிக்கை எடுக்குமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.”

10. பெருநகர சென்னை மாநகராட்சி மழை நீர் வடிகால் துறை உதவி செயற்பொறியாளர் மற்றும் மண்டலம் 11, வார்டு 147 இளநிலை பொறியாளர் ஆகியோர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 29.07.2025 அன்று நடைபெற்ற தொடர் விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:

“பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 11 வார்டு 147ல் மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படும் பணி ஆணையின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரரை கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளை கோட்ட பொறியாளர் மூலம் அளவீடுகள் புத்தகத்தில் பதிவு செய்யப்படுவதை உதவி செயற்பொறியாளர் மூலம் சரி பார்க்கப்படுகிறது. மேலும் பணிகளின் தரம் மற்றும் அளவீடுகள் குறித்து கள ஆய்வின் போது உறுதி செய்யப்படுகிறது. மேலும் வார்டு 147 மாமன்ற உறுப்பினர் அவர்களால் கள ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. மேலும் ஸ்ரீதேவி நகர் பிரதான சாலையில், (பகுதி) போடப்பட்ட தார் சாலையில் மூன்றாம் தரப்பினரால் சில பகுதிகள் கள ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், கிருஷ்ண நகர் 1வது பிரதான சாலை அமைக்கும் சமயம் திருமதி. A.சாந்தி ஆகிய நான் மழை நீர் வடிகால் துறைக்கு பணி மாற்றம் செய்யப்பட்டுவிட்டேன் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், தார் சாலைகள் டெண்டரில் குறிப்பிட்டுள்ள அட்டவணைப்படி உயரம், மற்றும் கருங்கல் ஜல்லிகள் பயன்படுத்தப்படுகிறதா என்பது கள ஆய்வு செய்யப்பட்டு குறை இருப்பின், ஒப்பந்த தொகையில் அதற்கான தொகை வழங்கப்பட மாட்டாது என இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.”

11. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 11ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி செயற் பொறியாளர், இளநிலை பொறியாளர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்து மழைநீர் வடிகால் துறையின் உதவி செயற்பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

பெருநகர சென்னை மாநகராட்சி, மதுரவாயல் 147–வது வார்டில் சித்தி விநாயகர் (பாலாஜி) ஸ்ரீராம் புரோமோட்டர்ஸ் (ரமேஷ்) ஆகிய இருவரும் லிமிடெட் டெண்டர் பணி வேலைகளை மட்டுமே எடுப்பதாகவும், அப்பணிகளை 147–வது மாமன்ற உறுப்பினரின் குடும்பத்தார் மேற்கண்ட நிறுவனத்திற்கு கமிஷன் கொடுத்துவிட்டு இவர்களே வேலை செய்வது போல் பாசாங்கு காட்டி மேற்கண்ட நிறுவனத்தின் M-Book–ல் உதவி செயற்பொறியாளரிடம் கையொப்பம் பெற்று முறைகேடு செய்து வருகிறார்கள் என்பதும், இது குறித்து 147–வது வார்டிற்கு சம்பந்தப்பட்ட இளநிலை பொறியாளரிடம் தொலைபேசி வாயிலாக மனுதாரர் பேசிய போது, மேற்கண்ட 147–வது வார்டு கவுன்சிலர்தான் வேலை செய்கிறார் என தெரிவித்தார் என்பதும், இது சம்பந்தமாக தமிழக அரசிடமும், நகராட்சி நிர்வாக ஆணையரிடமும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரிடமும் புகார்கள் கொடுக்கப்பட்டுள்ளது என்பதும், ஒப்பந்ததாரர் பெயரில் மாமன்ற உறுப்பினர்

மேற்கொள்ளும் பணி தரமானதாக இல்லை என்பதும், குறிப்பாக ஸ்ரீதேவி நகர் பிரதான சாலைகளில், கிருஷ்ணா நகர் பிரதான சாலை, அஷ்டலட்சுமி நகர் பிரதான சாலைகளில் போடப்பட்டுள்ள தார் சாலைகள் தரமற்று உள்ளன என்பதும், சென்ற வருடம் இப்பகுதியில் மழைநீர் வடிகால் பணியினை மாமன்ற உறுப்பினரே செய்து முடித்தார் என்பதும், இதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 11ன் அலுவலர்கள் ஒத்துழைப்புடன் இம்முறைகேடு நடைபெறுகிறது என்பதும், எனவே சம்பந்தப்பட்ட மாமன்ற உறுப்பினர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 11–ன் அலுவலர்கள் மீது விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கும்படி மனுதாரர் கோரியுள்ளது அவரது மனு மற்றும் வாக்குமூலங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள மண்டலம் 11, வார்டு 147ல் மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படும் பணி ஆணை அடிப்படையில் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரரைக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அப்பணிகளை கோட்டப்பொறியாளர் மூலம் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு அளவீடு புத்தகத்தில் பதிவு செய்யப்படுவதை உதவி செயற்பொறியாளர் மூலம் சரி பார்க்கப்படுகிறது என்பதும், மண்டல அலுவலர் 11 மூலம் ஒப்பந்ததாரருக்கு ஒப்பம் கோரப்பட்டு தேர்வு செய்து பணியாணை வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதும், அதனடிப்படையில் வார்டு 147ல் இளநிலை பொறியாளரால் 100 சதவீதம் ஆய்வு செய்து தரம் பார்த்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது என்பதும், 147வது மாமன்ற உறுப்பினர் அவர்களும் பணி நடைபெறும் இடத்தில் நேரில் சென்று ஆய்வு மேற்கொள்வார்கள் என்பதும், இதன்பிறகு பணிகள் முழுவதும் முடிந்ததவுடன் சரியான Measurement எடுத்து M.Bookல் சரி பார்த்து உதவி செயற் பொறியாளர் / பகுதி–32 மற்றும் செயற்பொறியாளர் / மண்டலம் 11 அவர்கள் மூலம் ஆய்வு மேற்கொண்டு உரிய கையொப்பம் பெற்று மேல் நடவடிக்கைக்கு அனுப்பப்படும் என்பதும், மேலும், ஸ்ரீதேவி நகர் பிரதான சாலையில், (பகுதி) போடப்பட்ட தார் சாலையில் மூன்றாம் தரப்பினரால் சில பகுதிகள் கள ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளது என்பதும், மேலும், தார் சாலைகள் டெண்டரில் குறிப்பிட்டுள்ள அட்டவணைப்படி உயரம், மற்றும் கருங்கல் ஜல்லிகள் பயன்படுத்தப்படுகிறதா என்பது கள ஆய்வு செய்யப்பட்டு குறை இருப்பின், ஒப்பந்த தொகையில் அதற்கான தொகை வழங்கப்பட மாட்டாது என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 11ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, உதவி செயற்பொறியாளர், தலைமையிடத்து மழைநீர் வடிகால் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மண்டலம் 11, வார்டு 147ல் மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தும் மண்டல அலுவலர் 11 மூலம் ஒப்பந்தம் கோரப்பட்டு, பணி ஆணை அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அப்பணிகளை கோட்டப்பொறியாளர் மூலம் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு அளவீடு புத்தகத்தில் பதிவு செய்யப்படுவதை உதவி செயற்பொறியாளர் மூலம் சரி பார்க்கப்படுகிறது என்றும், பணிகள் முழுவதும் முடிந்தவுடன் சரியான Measurement எடுத்து M.Bookல் சரி பார்த்து உதவி செயற் பொறியாளர் / பகுதி–32 மற்றும் செயற்பொறியாளர் / மண்டலம் 11 அவர்கள் மூலம் ஆய்வு மேற்கொண்டு உரிய கையொப்பம் பெற்று மேல் நடவடிக்கைக்கு அனுப்பப்படும் என்றும், ஸ்ரீதேவி நகர் பிரதான சாலையில், (பகுதி) போடப்பட்ட தார் சாலையில் மூன்றாம் தரப்பினரால் சில பகுதிகள் கள ஆய்வுகள் செய்யப்பட்டும், மேலும், தார் சாலைகள் டெண்டரில் குறிப்பிட்டுள்ள அட்டவணைப்படி உயரம், மற்றும் கருங்கல் ஜல்லிகள் பயன்படுத்தப்படுகிறதா என்பது குறித்து கள ஆய்வு செய்யப்பட்டு குறை இருப்பின், ஒப்பந்த தொகையில் அதற்கான தொகை வழங்கப்பட மாட்டாது என்றும் பெருநகர சென்னை மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோர் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்து இருந்ததாலும்,

(1) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 11, வார்டு 147–ல் 01.04.2024 முதல் இன்று வரை நடைபெற்ற ஒப்பந்தப் பணிகள் டெண்டரில் குறிப்பிட்டுள்ள அட்டவணையின்படி நடைபெற்றுள்ளதா என்பது குறித்து கண்காணிப்பு பொறியாளர் நிலையில் கள ஆய்வு செய்து அவரின் அறிக்கையை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு சமர்ப்பிக்குமாறும்,

மற்றும்

(2) மேற்கண்ட இனத்தில் அரசுக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் மூலம் ஆய்வு மேற்கொண்டு அத்துறையின் அறிக்கையை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு சமர்ப்பிக்குமாறும்,

மேற்கண்ட அறிக்கைகளின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. N. ராபர்ட்,
எண்.147 ஆற்காடு ரோடு,
வளசரவாக்கம்,
சென்னை–600 087.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) உதவி ஆணையாளர்,
மண்டலம் 11,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 123 ஆற்காடு சாலை,
வளசரவாக்கம்,
சென்னை–600 087.

(4) இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை துறை,
பேராசிரியர் க. அன்பழகன் மாளிகை, 4வது தளம்,
நந்தனம், சென்னை–600 035.

(5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர்,
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.